**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 81/2021**

**07.04.2025**

**P.W.1- சுப்பையன்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருவதாக பிராதில் கூறியுள்ளேனா என்றால் தெரியாது. எனது ஊருக்கும், பிரதிவாதியின் ஊருக்கும் இடையே சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். பிரதிவாதி அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கண்ட சொத்து பிரதிவாதிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் பிரதிவாதியின் கிரைய சொத்தாகும். தாவா சொத்து அரசால் பிரதிவாதிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்து என்பதால் பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் போட்டது தவறு என்றால் தெரியாது. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதியின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் யாராவது கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் கையெழுத்து போட்டுள்ளார்கள். அவ்வாறு கையெழுத்து போடவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ரூ.3,75,000 கடன் கொடுத்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பணத்தை ஆடு, மாடு விற்பனை செய்ததன் மூலம் கிடைத்தது. மேற்படி ஆடு, மாடு வாங்கியவர்களை விசாரிக்க தயாரா என்றால் அவர்கள் தற்போது உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா என தெரியாது. 2018ம் வருடம் முன்பணம் கொடுத்தேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. மேற்படி பணத்தை ரூ.500 கட்டுகளாக கொடுத்தேன். மேற்படி பணம் கொடுக்கும்போது சாட்சி யாரும் உடனிருந்தார்களா என்றால் கையெழுத்து போட்டவர்கள் தான் சாட்சி. மேற்படி பணத்தை பத்திர அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். நான் வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தர வேண்டிய

பணத்திற்காக வழக்கு போட்டுள்ளேன். பணத்தை திரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சொத்து விவரம்,



புல எண்., நான்கு மால் ஆகியவை தெரியாது. பிராதில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. வழக்கறிஞர் படித்து காண்பிக்கவில்லை. பிரதிவாதிக்கு எப்போது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி ஞாபகமில்லை. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன விவரம் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டு அறிவிப்பு அனுப்பினேன். பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை என காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதி என் மீது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரில் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். விசாரணையின் போது நான் வட்டிக்கு பணம் கொடுத்ததாகவும், அசலும், வட்டியும் திரும்ப தந்தால் கிரைய ஒப்பந்தம் வேண்டாம் என எழுதிக்கொடுத்தேன் என்றால் அவ்வாறு எழுதிக் கொடுக்கவில்லை. பிரதிவாதிக்கு ரூ.1 லட்சம் கொடுத்துவிட்டு மிரட்டி ரூ.3,75,000ற்கு கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. சொத்தை எழுதி வாங்க தான் பணம் கொடுத்தேன். பொறுப்புக்காக தாவா சொத்தை எழுதி வாங்கினேன் என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென
ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால்
கையொப்பம் இடப்பட்டது

ஒம் / P.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி
உசிலம்பட்டி.